**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**IA 1/2022 IN OS.NO.22/2022**

| | | |
|---|---|---|
| **NAME** | : | மூர்த்தி |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 11.10.2022.**

முதல் விசாரணை

பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எனக்கு படித்து காண்பித்தார்கள் தெரிந்து கொண்டுதான் கையொப்பம் செய்தேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1. 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் வேலூர் கூடுதல் மாவட்ட முதன்மை நீதிமன்றம் எண்.1ல் தாக்கல் செய்த அ.வ.எண்.22/2022 உறுதிமொழி பிரமாண வாக்குமூலம் நகல் ம.த.சா.ஆ.1.

2. 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் வேலூர் கூடுதல் மாவட்ட முதன்மை நீதிமன்றம் எண்.1ல் தாக்கல் செய்த அ.வ.எண்.22/2022 உறுதிமொழி குறிப்பாணை நகல் ம.த.சா.ஆ.2.

3. மறுச்சொத்தின் கணிணி வழி வில்லங்க சான்று ம.த.சா.ஆ.3.

4. 13.05.2022 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் கூட்டாய் இணைந்து 3ம் நபரான ஜெ.என்.கௌரிசங்கர் என்பவருக்கு ஏற்படுத்தி கொடுத்துள்ள கிரய ஆவணம் சான்றிட்ட நகல் ம.த.சா.ஆ.4.

5. மனுதாரர் சப்ரிஜிஸ்டாருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் பதிவு அஞ்சல் ரசீது ம.த.சா.ஆ.5.

6. 12.05.2022 மனுதாரர் 1 முதல் 2வரையுள்ள எதிர்மனுதாரர்களுக்கும், 3ம் நபர் மற்றும் சப்ரிஜிஸ்டாருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் அஞ்சல் ரசீது ம.த.சா.ஆ.6.

7. 20.05.2022 1முதல் 2 எதிர்மனுதாரர்கள் மற்றும் 3ம் நபருக்கு பெற மறுத்து திரும்ப வந்ததற்கான அஞ்சல் உறைகள் மூன்று (3) ம.த.சா.ஆ.7.

குறுக்கு விசாரணை

நான் இதற்கு முன்பு பாரத ஸ்டேட் வங்கியில் மேனஜராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்துவருகிறேனா என்றால் இல்லை. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 31.05.2016ல் ரிட்டையர்டு ஆனேன். ரிட்டையர்டு ஆன பணம் ஒரு வாரத்திலேயே வந்துவிட்டது. அது என்னுடைய வங்கிக் கணக்கில் இருந்தது. பாலமூர்த்தி, லிங்கமூர்த்தி எப்படி பழக்கம் என்றால் என்னுடைய ஹவுசிங் லோன் பாரோயர் மூலமாக இவர்களைத் தெரியும். அவர் பெயர் சுகுமார், அவர் மின்சார வாரியத்தில் அக்கவுண்டண்ட் ஆக இருந்தார். இந்த விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை. எந்த மாதம் என்னிடம் வந்து பணம் கேட்டார் என்றால் தேதி ஞாபகம் இல்லை. ஜீன் அல்லது ஜீலை கடைசியில் வந்து கேட்டார். நான் பணத்தை வங்கியிலிருந்து தான் எடுத்துக் கொடுத்தேன். அந்த ஸ்டேட்மெண்ட் போட்டுள்ளேன். அவர் வட்டி கொடுத்ததை நான் வரவு வைத்துள்ளேன். தங்கமணி தியேட்டருக்கு எதிரில் தனம்மாள் கல்யாண மண்டபத்தில் வைத்து பணம் கேட்டார்கள். பிரதிவாதிகள் மீது எத்தனை வழக்கு உள்ளது என்று எனக்குத் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி மீது வழக்கு உள்ளது என சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. கடன் வாங்கும்போது எத்தனை கையெழுத்து வாங்கினேன் என்றால் ஒவ்வொரு பாண்டில் இரண்டிரண்டு கையெழுத்துக்கள் வாங்கினேன். எத்தனை பாண்டுகள் கையெழுத்து வாங்கினேன் என்றால் முதலில் 5 பாண்டுகள் கையெழுத்து வாங்கினேன். 01.10.2014ல் 4 பாண்டுகளில் ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு கையெழுத்துக்கள் வாங்கினேன். பாண்டையெல்லாம் பிரதிவாதிகளே எழுதிக்கொண்டுவந்தார்கள். 100க்கு ரூ.2 வட்டி. பாண்டில் கையெழுத்து வாங்கிய தேதி அன்றைய தேதி மாலை இருக்கும். பணம் வாங்கியபிறகுதான் பாண்டு எழுதிவந்தார். சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள். மூர்த்தி, ரவிக்குமார் ஆகியோர் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பாண்டுகளில் உள்ள கையெழுத்துக்கள் தான் சாட்சி மற்றும் பிரதிவாதிகள் கையெழுத்து என்றால் ஆமாம். அது எ.ம.த.சா.ஆ.1, 2. முழு பாண்டு என்னிடம் கொடுப்பதற்கு முன்னால் என்ன நடந்தது என்று எனக்கு கரெக்ட்டாக தெரியாது. வழக்கறிஞர் மூலமாக ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அதற்கு பதில் பிரதிவாதிகள் கொடுத்தார்கள். அதை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என்னிடம் காண்பிக்கப்படும் நோட்டீஸ்தான் அவர் அனுப்பிய பதிலா என்றால் சரி. அது எ.ம.த.சா.ஆ.3,

அதற்கான ஒப்புதல் ரசீத எ.ம.த.சா.ஆ.4. பிரமாண வாக்குமூலத்தில் 04.08.2014ல்தான் பணம் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரி. 23.07.2020 அன்று வட்டி கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் முதல் ரூ.10 லட்சத்திற்கு வட்டி கொடுத்ததாக கூறியுள்ளேன். ரூ.10 லட்சம் கடன் வாங்கியதற்கு முதல் 2 மாதம் வட்டி கொடுக்கவில்லை. மறுபடியும் பணம் கேட்டார்கள். வட்டி கட்ட தகுதியே இல்லாத நபரிடம் எப்படி பணம் கொடுத்தேன் என்றால் முதலில் கொடுத்த ரூ.10 லட்சம் பத்தாது என கேட்டதால் நான் மறுபடியும் அவர்களுக்கு ரூ.9 லட்சத்து 87 ஆயிரம் குடியாத்தம் கேஸ் பாகப்பிரிவினைக்காக கொடுத்தேன். இவர்கள் தங்கள் பங்கை நான் கொடுத்த தொகை கொண்டு வாங்கிக் கொண்டார்கள். அந்த பணம், என் பென்ஷன் லோன் பணம், என்னிடம் இருந்தபணம், என் தங்கையின் சிபாரிசு மூலமாக ஜெயச்சந்திரனிடம் இருந்து வாங்கிய பணம். அந்த பணம் வாங்கியதற்கு என் பெயரில் ஒரு பாண்டு எழுதிக்கொடுத்துள்ளேன். இந்த விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை. (வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.